## கூடுதல் மாவட்ட நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

## அ.வ.எண். 270 /2024

நாள் :21.01.2026.
வா.சா.1 – ஆண்டிச்சாமி
பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1. இந்த வழக்கில் எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சேதுபுரம் கிராமத்தில் உள்ள சொத்துக்களை மட்டும் தான் சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். ரகுநாதமடை கிராமத்தில் உள்ள சொத்துக்களை ஏன் இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் அனைத்து பாகஸ்தர்களும் சேர்த்து அந்த பாகத்தை விற்றுவிட்டதால் அந்த சொத்துகளை இந்த வழக்கில் சேர்க்கவில்லை. மணிகண்டன் என் உடன் பிறந்த சகோதரர் ஆவார். நானும் 2ம் வாதியும் சேர்ந்து ரகுநாதமடை கிராமத்தில் உள்ள சர்வே எண்.160/3A 1.11 Acres JBS என்ற ஏற்றுமதி நிறுவனத்திற்கு விற்பனை செய்துள்ளோம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் கிரையபத்திரம் நாங்கள் எழுதிக்கொடுத்ததாகும். அந்த கிரைய ஆவணம் 1547/2014 நாள் 17.07.2014 அன்று திருச்சுழி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது. அந்த கிரைய ஆவணத்தின் கணினி நகல் **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. பி.வா.சா.ஆ1 ல் விற்கப்பட்ட சொத்து பூர்வீக பாத்தியப்பட்டு எங்களுடைய தகப்பனார் பெயரில் பட்டா எண்.450ல் உள்ள சொத்தை விற்பனை செய்துள்ளோம் என்று சொன்னால் கூட்டானுபவத்தில் உள்ள சொத்தை விற்றோம் என்று சாட்சி கூறுகிறார். கூட்டு சுவாதீனமாக விற்பனை செய்துள்ள ஏன் ஆதி சுவாதீனரான என் தாத்தா பட்டமுத்து நாயக்கர் வாரிசுகளை சேர்க்கவில்லை என்றால் சுவாதீனத்தில் உள்ளோர்களை சேர்த்துள்ளோம் என்று சாட்சி கூறுகிறார். என் சித்தப்பாவான 9ம் பிரதிவாதி ரகுநாதமடை கிராமத்தில் அமைந்துள்ள சர்வே எண்.176/3 2ஏக்கர் 4 செண்டு சொத்தை விற்பனை செய்துள்ளார் என்றால் சரிதான். 1மற்றும் 2ம் பிரதிவாதிகள் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பாகத்தை விற்பனை செய்துள்ளார்கள் என்று சொன்னால் பாகம் ஒதுக்கப்படவில்லை சுவாதீன அடிப்படையில் விற்பனை செய்ததாக சாட்சி கூறுகிறார். ரகுநாதமடை கிராமத்தில் அமைந்துள்ள சொத்துக்களை பொறுத்து பட்டமுத்து நாயக்கரின் வாரிசுதாரர்கள் வாய்மொழியாக 1975ம் ஆண்டு பாகத்தை பிரித்து கொண்டு அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை விற்பனை

செய்துவிட்டார்கள் என்று சொல்வது தவறு பாகம் ஏற்படவில்லை. பாகம் பிரிக்கப்படவில்லை என்றால் ஏன் தனித்தனியாக கிரைய பத்திரம் ஏற்படுத்தினார்கள் என்றால் அனுபவத்தின் அடிப்படையில் விற்பனை செய்ததாக சாட்சியம் கூறுகிறார். தாவா 35 வது இலக்க சொத்தை 1 மற்றும் 2 வது பிரதிவாதிகள் தங்கள் பெயரில் தனியாக கிரையம் பெற்றுள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது.

**(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது. )**

இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VASANTHA KUMAR

Digitally signed by M VASANTHA KUMAR
Date: 2026.01.21 18:00:55 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி
அருப்புக்கோட்டை.